செய்தி வெளியீடு எண்.77 நாள்.21.09.2020

**பத்திரிக்கை செய்தி**

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சிறப்பு திட்டம் 'சகி' என்ற ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பணிபுரிய பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

1. **மைய நிர்வாகி** (Centre Administrator) (பதவி–1)

சமூகப் பணியில் முதுகலை பட்டம் (Master's Degree in Social Work) பெற்றிருக்க வேண்டும். உளவியல் ஆலோசனை அல்லது வளர்ச்சி மேலாண்மையில் பெண்கள் பிரச்சினைகளுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாரா திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் குறைந்த பட்சம் 4 வருட அனுபவம் உடையவராகவும், உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தங்குமிடம் வழங்கப்படும். மாத ஊதியம் 30,000/– ஆகும்.

2. **வழக்கு அலுவலர்** (Case worker) (பதவி–1)

சமூகப் பணியில் இளங்கலை பட்டம் (Bachelor's Degree in Social Work) பெற்றிருக்க வேண்டும். உளவியல் ஆலோசகர் (Counselling Psychology) (அல்லது) மேலாண்மை வளர்ச்சியில் (Development Management) பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாராத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் 1 வருட முன்அனுபவம் உடையவராகவும், உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் சுழற்சி முறையில் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டி இருக்கும். மாத ஊதியம் 15,000/– ஆகும்.

விரும்பும் பதவிகளுக்கு உரிய சான்றிதழ்களுடன் 25.09.2020 மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் 8–வது தளம், சிங்காரவேலன் மாளிகை, இராஜாஜி சாலை, சென்னை–01 என்ற முகவரியில் நேரடியாக விண்ணப்பம் செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01